# மாவட்ட நீதிமன்றம், உதகமண்டலம்

O.S. No. 46 of 2021

பெயர் : ஜகதீஷ்

D.W. 1

13.10.2025

**பி.வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, அ.வ.எண்.46/2021 மற்றும் அ.வ.எண்.65/2021 வாதி தரப்பு பொது குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

10. அ.வ.எண். 46/2021 வழக்கின் எதிர் வழக்குரையில் நான் முள்ளிகூர் கிராமத்தில் உள்ள 16 ஏக்கர் நிலத்தில் English vegetables பயிரிடுவதாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால், 16 ஏக்கரில் டீ இருக்கிறது, 4.5 ஏக்கரில்தான் English vegetables பயிரிடுகிறோம். Exhibit B2வில் இன்னாருக்கும் இன்னாருக்கும், அதாவது வாதிக்கும், எனக்கும் சம்பந்தமாக அது ஏற்பட்டது என்ற வாசகங்களும், வாதியும், நானும் முதல் தரப்பினர், இரண்டாம் தரப்பினர் என்று குறிப்பிட்டும் கையொப்பம் போடவில்லை என்று சொன்னால், எல்லோரும் சாட்சிகளாகதான் கையொப்பம் இட்டுள்ளோம். Exhibit B2ல் மொத்தம் 10 சாட்சிகள் கையொப்பம் போட்டுள்ளோம் என்று சொன்னால், ஆமாம். இந்த 10 பேரும் Exhibit B2ல் சாட்சிகளாகதான் கையொப்பம் போட்டுள்ளோம் என்று சொன்னால், ஆமாம். அதனால் Exhibit B2ல் கையொப்பம் போட்டுள்ளவர்கள் யாருமே பிரச்சனை சம்பந்தப்பட்ட தரப்பினர்கள்

இல்லை என்றும், அதனால் Exhibit B2ல் கையொப்பம் போட்டுள்ளவர்கள் யாரையும் அது கட்டுப்படுத்தாது என்று சொன்னால், அப்படி சொல்வது தவறாகும்.

11. எங்கள் தொழிற்சாலை சம்பந்தப்பட்ட Ledgerல் நாங்கள் எல்லோரிடமும் கையொப்பங்கள் பெற்றுவிட்டு, அதை Exhibit B2 தீர்மானமாக எழுதிவிட்டோம் என்று சொன்னால், தவறாகும். அதனால் அசல் Ledger வந்தால்தான் Exhibit B2வின் தன்மை தெரியவரும் என்று சொன்னால், அந்த Ledger தற்போது எங்கிருக்கிறது என்பது தெரியவில்லை. அந்த Ledgerஐ நீதிமன்றத்திற்கு கொண்டுவந்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால்தான், நாங்களே அதை மறைத்துவிட்டு தொலைந்துவிட்டதாக கூறுகிறோம் என்று சொன்னால், தவறாகும்.

12. Exhibit B2 தீர்மானத்தில் 3வது கிளாசில் துடியலூர் பூமி மற்றும் கொட்டக்கம்பை பூமி விற்ற பணம் பேக்டரி கடனுக்காக வங்கிக்கு செலுத்தப்பட்டது என்று உள்ளது என்றும், அதனால் பேக்டரி கடன் முழுவதையும் நாங்கள் அடைத்துவிட்டோம் என்று சொன்னால், அப்படி சொல்வது தவறாகும், பேக்டரியின் பகுதி கடன்தான் நாங்கள் அனைவரும் ஒன்றாக இருந்தபோது செலுத்தப்பட்டது. அதனால் Exhibit B2 தீர்மானத்தில் 3வது கிளாசில் துடியலூர் பூமி மற்றும் கொட்டக்கம்பை பூமி விற்ற பணம் பேக்டரி கடனுக்காக வங்கிக்கு செலுத்தப்பட்டது என்று உள்ளது

தவறு என்று சொன்னால், சரியில்லை, அப்படி சொல்லியிருப்பது சரிதான். Exhibit B2 தீர்மானத்தில் 3வது கிளாசில் துடியலூர் பூமி மற்றும் கொட்டக்கம்பை பூமி விற்ற பணம் பேக்டரி கடனுக்காக வங்கிக்கு செலுத்தப்பட்டது என்று உள்ளது என்பதால் என்னுடைய எதிர்வழக்குரையில் நான்தான் கஷ்டப்பட்டு பேக்டரி கடனை அடைத்ததாக சொல்வது தவறு என்று சொன்னால், சரியில்லை, நாங்கள் ஒட்டுக்காக இருந்தபோது பேக்டரியின் பகுதி கடன் அடைக்கப்பட்டது, தீர்மானத்திற்கு பிறகு மீதி பேக்டரி மற்றும் நிலத்தின் கடன் முழுவதையும் நான் ஏற்றுக்கொண்டு அடைத்தேன். நாங்கள் ஒட்டுக்காக இருந்தபோது பகுதி கடனை அடைத்துவிட்டோம் என்றும், தீர்மானத்திற்கு பிறகு நாங்கள் பாக்கி கடனையும் அடைத்துவிட்டோம் என்றும், அதனால் பாக்கி கடன் முழுவதையும் நான்தான் அடைத்ததாக சொல்வது தவறு என்று சொன்னால், சரியில்லை.

13. ஸ்ரீகல் டீ பேக்டரிக்கும், மானியாடா டீ பேக்டரிக்கும் இந்த இரண்டு வழக்குகளுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால், இரு வழக்கிற்கு சம்பந்தம் இருக்கிறது. ஸ்ரீகல் டீ பேக்டரிக்கும், மானியாடா டீ பேக்டரிக்கும் அ.வ. எண். 46/2021 வழக்கில் உள்ள முள்ளிகூரில் உள்ள 16 ஏக்கர் மற்றும் 4.50 ஏக்கர் சொத்துக்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால், அந்த பேக்டரிகள் கடனையும் மற்றும் விவசாய கடனை அடைப்பதற்காகதான் அந்த நிலங்கள் அடமானம் வைக்கப்பட்டன.

Exhibit B2 தீர்மானம் எழுதப்பட்டதாக சொல்லப்படும் 2009ஆம் ஆண்டு அ.வ.எண்.46/2021 வழக்கின் சொத்துக்கள் அடமானம் வைக்கப்படவில்லை என்று சொன்னால், தவறாகும்.

14. எங்கள் குடும்பத்திற்கு ஸ்ரீகல் டீ பேக்டரி, மானியாடா டீ பேக்டரி மற்றும் 106 ஏக்கர் எஸ்டேட்டும் சொத்துக்கள் என்று நான் கூறியுள்ளேன் என்று சொன்னால், ஆமாம். அ.வ.எண்.46/2021 வழக்கின் மொத்த சொத்தான 20.50 ஏக்கர் நிலமும் முள்ளிகூர் கிராமத்தில் இருக்கின்றன என்று சொன்னால், ஆமாம். அந்த 20.50 ஏக்கர் நிலம் முள்ளிகூரை தவிர வேறு எந்த கிராமத்திலும் இல்லை என்று சொன்னால், ஆமாம். அதனால் Exhibit B2ல் 1வது கிலாசில் சொல்லப்பட்டுள்ள எமரால்டு எஸ்டேட்டுக்கும், அ.வ.எண்.46/2021 வழக்கின் சொத்துக்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால், தவறாகும், எமரால்டு தோட்டம் என்பது போஸ்டல் அட்ரஸ் ஆகும், ஆனால் Exhibit B2 வில் எமரால்டு தோட்டம் என்பது போஸ்டல் அட்ரஸ் என்று எழுதப்படவில்லை.

15. பொதுவாக கடன்கள் எல்லாம் ஸ்ரீகல் டீ பேக்டரி, மானியாடா டீ பேக்டரிக்காக வந்தது என்று கூறுகிறேன் என்று சொன்னால், அந்த பேக்டரிக்களுக்காகவும், விவசாய நிலம் அபிவிருத்திக்காகவும் கடன்கள் வந்தன. என்னுடைய எதிர்வழக்குரையில் எங்காவது விவசாய நிலங்களை அபிவிருத்தி செய்வதற்காக கடன்கள் பெறப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா

என்று கேட்டால், இல்லை. நான் தற்போது விவசாய நிலங்களை அபிவிருத்தி செய்வதற்காக கடன்கள் பெறப்பட்டதாக சொல்வது பொய் என்று சொன்னால், சரியில்லை. ஸ்ரீகல் டீ பேக்டரி, மானியாடா டீ பேக்டரிகள் நடத்தியபோது Tea crisis வந்துவிட்டது, அதற்காகதான் கடன் வாங்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால், ஆமாம்.

16. பொதுவாக 4 நபர்கள் பேக்டரிகளை நடத்தினால் அனைவரும் சேர்ந்து கடனை கட்டுவோம் என்றும், அல்லது ஒருவர் மட்டும் கடனை கட்டுவதாக ஒப்புக்கொண்டால் அவர் அந்த பேக்டரியின் Assets and liabilitiesஐ எடுத்துக்கொள்வார் என்று சொன்னால், அந்த சமயத்தில் நான் டீ பேக்டரியின் நிறுவாக இயக்குநராக இருந்ததால் Assets and liabilities were created by me and as per resolution assets and liabilities were handed over to me as a managing director, அ.வ.எண்.46/2021 வழக்கின் 20.50 ஏக்கர் நிலமும் அந்த assetsன் பகுதியாகும். இந்த அ.வ.எண்.46/2021 வழக்கின் 20.50 ஏக்கர் நிலமும் அந்த assetsன் பகுதி என்று நான் சொல்வது தவறு என்றும், அச்சொத்துக்கள் முழுவதும் எனக்கும், வாதிக்கும் பாத்தியப்பட்டது என்று சொன்னால், சரியில்லை.

17. நாங்கள் இந்த ஸ்ரீகல் டீ பேக்டரி, மானியாடா டீ பேக்டரியை மூடுவதற்கு முன்பே தொடங்கப்பட்ட பேக்டரிகள் இயங்கிக்கொண்டுதான் வந்தன என்று சொன்னால், 160 டீ பேக்டரிகளில், 80 டீ பேக்டரிகள் மூடப்பட்டன, 80 டீ பேக்டரிகள்

இன்றுவரை இயங்கிக்கொண்டுதான் இருக்கின்றன. நான் டீ பேக்டரியின் நிறுவாக இயக்குநர் என்ற முறையில் செய்த ஊதாரரித்தனமான செலவுகள் காரணமாகதான் இந்த கடன்கள் வந்தன என்று சொன்னால், தவறாகும். நான் எந்த காலத்திலும் இந்த டீ பேக்டரியின் நிருவாக இயக்குநர் என்ற முறையில் மற்ற இயக்குநர்களோடு எந்த தீர்மானமும் போடவில்லை என்றும், நான் அவர்களது ஒப்புதல் இல்லாமல் சுயமாகவும், தான்தோன்றிதனமாகவும் செயல்பட்டு வந்தேன் என்று சொன்னால், தவறாகும், நான் மற்ற இரண்டு இயக்குநர்களோடு தீர்மானம் போட்டுள்ளேன். நான் என் தம்பியான வாதிக்கு தீர்மானம் பற்றி எந்த தகவலும் கொடுக்கவில்லை என்று சொன்னால், என் தம்பிக்காக என் அப்பா பொது அதிகாரம் பெற்ற முகவராக இருந்தார், நான் என் அப்பாவிடம் தீர்மானத்தை பற்றி சொல்லியுள்ளேன், ஆனால் என் அப்பாவிற்கும், என் தம்பியான வாதிக்கும் என்ன நடந்தது என்பது எனக்கு தெரியாது. அந்த தீர்மான புத்தகம் யாருடைய வசத்தில் இருக்கிறது என்று கேட்டால், வங்கியின் வசத்தில் இருக்கிறது. தீர்மான புத்தகம் எப்போதும் நிறுவாக இயக்குநர் என்ற முறையில் என் வசத்தில்தான் இருக்கும் என்றும், நான் தீர்மான புத்தகம் வங்கியில் இருப்பதாக சொல்வது பொய் என்றும், தீர்மான புத்தகத்ததை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதை தவிர்ப்பதற்காகதான் அது வங்கி வசத்தில் இருக்கிறது என்று

பொய் சொல்கிறேன் என்று சொன்னால், சரியில்லை, மானியாடா டீ பேக்டரியில்தான் தீர்மான புத்தகம் இருக்கிறது, தற்போதும் மானியாடா டீ பேக்டரி வங்கியிடம்தான் இருக்கிறது. ஸ்ரீகல் டீ பேக்டரியின் தீர்மான புத்தகம் எங்கே என்று கேட்டால், ஸ்ரீகல் டீ பேக்டரி பங்குதாரர் நிறுவனமாகும், அதற்கு தீர்மான புத்தகம் பராமரிக்கப்படவில்லை. பங்குதாரர் நிறுவனமாக இருந்தாலும், தீர்மான புத்தகத்ததை பராமரிக்க வேண்டும் என்றும், என்னுடைய ஊதாரித்தனமான செலவுகள் தெரிந்துவிடும் என்பதால்தான் நான் அதை மறைக்கிறேன் என்று சொன்னால், பங்குதாரர் நிறுவனத்திற்கு தீர்மான புத்தகத்தை பராமரிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஸ்ரீகல் பேக்டரியின் மற்ற பங்குதாரரிடம் நான் கடன் பெறுவதற்கும், பேக்டரியின் மற்ற நடவடிக்கைகளுக்காகவும் எவ்வாறு ஒப்புதல் பெற்றேன் என்று கேட்டால், வீட்டில் ஆலோசனை செய்து வங்கியிலும் கடன் பெற்றோம், அந்த கடனுக்காக அவர்கள் அனைவரும் கையொப்பம் போட்டுள்ளார்கள். நான் ஸ்ரீகல் பேக்டரியை தவறாக நடத்தியதால்தான், குடித்துவிட்டு ஊதாரிதனமான செலவுகளை செய்ததால்தான் அந்த பேக்டரிக்கு கடன் ஏற்பட்டது என்று சொன்னால், தவறு, அந்த பேக்டரியை கட்டுவதற்கே கடன் பெற்றுதான் கட்டினோம்.

18. பொதுவாக ஒரு பேக்டரிக்கு நஷ்டம் ஏற்பட்டால், அதன் பங்குதாரர்கள் எல்லோரும் சேர்ந்துதான் கடனை கட்டுவார்கள்,

இல்லாவிட்டால் ஒரு பங்குதாரர் அந்த பேக்டரியின் Assets and liabilitiesஐ எடுத்துக்கொண்டு அவர்தான் கடனை கட்டுவார் என்றும், அதற்காக குடும்ப சொத்துக்கள் அடமானம் வைக்கப்படாது என்று சொன்னால், ஒட்டுக்காக இருந்தபோது கடன் வாங்கினோம், அதன்பிறகு வாதி வெளிநாடு சென்றுவிட்டார், அதன்பிறகுதான் இந்த Exhibit B2 தீர்மானம் போடப்பட்டு நான் கடனை கட்டினேன்.

19. Exhibit B2 தீர்மானம் 2009ஆம் ஆண்டு எழுதப்பட்டதாக சொல்வதற்கு முன்பு நாங்கள் ஒட்டுக்காக இருந்தபோது பேக்டரியின் பகுதி கடன் அடைக்கப்பட்டது என்றும், Exhibit B2 தீர்மானம் 2009ஆம் ஆண்டு எழுதப்பட்டதாக சொல்லும்போது துடியலூர் மற்றும் கொட்டக்கம்பை சொத்துக்கள் விற்கப்பட்டு பேக்டரியின் கடன் அடைக்கப்பட்டதாக நான் கூறுகிறேன் என்று சொன்னால், நாங்கள் ஒட்டுக்காக இருந்தபோது பகுதி கடனை செலுத்துவதற்கு முன்பே அ.வ.எண்.46/2021 வழக்கின் சொத்துக்கள் வங்கியில் அடமானம் வைக்கப்பட்டது, Exhibit B2 தீர்மானத்திற்கு பிறகு நான் முழு கடனையும் அடைத்துள்ளேன்.

20. Exhibit B2 தீர்மானத்தில் துடியலூர் மற்றும் கொட்டக்கம்பை சொத்துக்கள் பேக்டரியின் கடனுக்கான வட்டியை செலுத்துவதற்காக விற்கப்பட்டதாக குறிப்பாக Exhibit B2வில் இருக்கிறதாக என்று கேட்டால், அப்படி இல்லை, ஆனால் வங்கி கடன் என்பது வட்டியையும் உள்ளடக்கும். துடியலூர்

மற்றும் கொட்டக்கம்பை பூமிகளை விற்கு வங்கி கடன் முழுவதும் கட்டி முடிக்கப்பட்டது என்று சொன்னால், தவறாகும், அந்த பூமிகளை 2008, 2009 ஆண்டுகளில் விற்றோம், வங்கி கடனை அடைத்தது 2017ஆம் ஆண்டாகும். துடியலூர் மற்றும் கொட்டக்கம்பை பூமிகளை விற்ற பிறகு அதன்மூலம் கிடைத்த மொத்த கிரைய தொகையையும் வங்கியில் டெபாசிட் செய்து வைத்தோமா என்று கேட்டால், வங்கியின் கடனுக்காக அக்கிரைய தொகை முழுவதையும் செலுத்திவிட்டோம்.

21. நான் டீ பேக்டரியும், டீ எஸ்டேட்டும் வைத்திருந்தேன் என்றும், 1 ஏக்கர் டீ தோட்டத்தில் குறைந்தது மாதம் ரூபாய் 10,000/– வருமானம் வரும் என்று சொன்னால், அதை சொல்லமுடியாது, மார்க்கெட்டிங்கை பொறுத்தது. தற்போது இருக்கம் 106 ஏக்கர் எஸ்டேட் எங்கள் அப்பாவின் பூர்வீக சொத்து என்று சொன்னால், சரியில்லை. 1 ஏக்கர் டீ தோட்டத்தில் மாதம் வருமானம் ரூபாய் 10,000/–ற்கு குறைவில்லாமல் வருகிறது என்றும், நான் அதை சொல்வதை தவிர்க்கிறேன் என்று சொன்னால், சரியில்லை. 106 ஏக்கர் டீ எஸ்டேட்டில், 1 ஏக்கருக்கு மாத வருமானம் ரூபாய் 10,000/– வரும், அதனால் 106 ஏக்கர் டீ தோட்டத்தில் மாதம் ரூபாய் 10,00,000/– மேல் வருமானம் வரும் என்று சொன்னால், சரியில்லை, பாதி தோட்டத்திற்குமேல் எதிரடிக்கு அதாவது பணத்தை வாங்கிக்கொண்டு தோட்டத்தை கொடுத்துள்ளோம். நாங்கள் பாதி தோட்டத்தை எதிரடிக்கு

கொடுத்தோம் என்று சொல்வது சுத்த பொய் என்று சொன்னால், தவறாகும்.

22. குடும்ப கடனுக்காக 2 சொத்தை விற்றுவிட்டோம், டீ பேக்டரியையும் என் கையில் கொடுத்துவிட்டார்கள், 106 ஏக்கர் டீ எஸ்டேட்டையும் என்னிடம் கொடுத்துவிட்டு அதனால் Exhibit B2 தீர்மானத்தின்படி என் அப்பா என்னிடம் வாரத்திற்கு ரூபாய் 10,000/- மட்டும் குடும்ப செலவிற்காக என்னிடம் பெறுவதாக சொல்வது சொற்ப காசு அது ஒரு பிச்சை காசு என்று சொன்னால், அப்படி சொல்வது தவறாகும், பாதி சொத்து அடமானத்தில் இருந்ததாலும், வங்கியில் கடன் இருந்ததாலும், டீ பேக்டரி வங்கியின் வசத்தில் இருந்ததாலும்தான் எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு அந்த ரூபாய் 10,000/-ஐ நிர்ணயம் செய்தார்கள்.

23. என் மனைவி என்னைவிட்டு பிரித்து வாழ்கிறார் என்று சொன்னால், ஆமாம், நானும், என் மகனும் சேர்ந்து வாழ்கிறோம், என் அப்பாவிற்கு உடம்பு சரியில்லை என்பதால் அவரும் எங்களோடு இருக்கிறார். என் அப்பாவிற்கு உடம்பு சரியில்லாமல் இருந்தபோது, என் அப்பாவையும், என் அம்மாவையும் என் சகோதரிதான் கவனித்து வந்தார் என்று சொன்னால், தவறாகும். நான் தற்போது பயன்படுத்திவரும் TN 43 F 9909 என்ற கார் என் சகோதரி பெயரில் இருக்கும் கார் என்று சொன்னால், ஆமாம். வாதி இந்த காரை என் அப்பா, அம்மாவின் பயன்பாட்டிற்காக என்

சகோதரி பெயரில் வாங்கி கொடுத்தார் என்று சொல்வது, தவறாகும், Indusind Bankல் கடன் பெற்று அந்த கார் வாங்கப்பட்டது. அந்த காரை வாதிதான் கடன் பெற்று என் அக்கா பெயரில் வாங்கி கொடுத்தார் என்று சொன்னால், அது எனக்கு தெரியாது, கடன் என் அக்கா பெயரில்தான் இருக்கிறது, என் அக்கா ஒரு சில தவணை பணத்தை என்னிடம் கொடுத்து அதை நான் வங்கியில் செலுத்தியுள்ளேன். நான் கார் கடனுக்காக என் பணம் எதையும் செலுத்தவில்லை என்று சொன்னால், இல்லை, என்னிடம் பணமே இல்லை.

24. என் அப்பாவிற்கு என் அக்கா, பேரப்பிள்ளைகள், அப்பா, அம்மாவின் மருத்துவ செலவு, குடும்ப செலவு, ஊர் விஷேசத்திற்கு பெரிய செலவு இருக்கிறது என்று சொன்னால், சரியில்லை, அக்காவிற்கு சொத்தை கொடுத்துவிட்டார்கள், என் பையனை நான் பார்த்துவருகிறேன். என் அப்பா மற்றும் அம்மா செலவிற்காக வாதி அவ்வப்போது என் அப்பாவிற்கு பெரிய தொகையை கொடுத்து வருகிறார் என்று சொன்னால், தவறாகும். Exhibit B2 மொத்த தீர்மானமும், மொத்த சொத்தையும் எனக்கு தானமாக கொடுத்ததுபோல் என்னால் செய்யப்பட்ட ஏற்பாடு என்று சொன்னால், தவறாகும். Exhibit B2 முழுக்க முழுக்க ஒருதலைபட்சமாக இருக்கிறது என்றும், சாதாரண எந்த நபரும் அல்லது முட்டாளும்கூட அதில் கையொப்பம் போட மாட்டார்கள் என்றும், அதனால் வாதி Exhibit B2வில் கையொப்பம்

போடவில்லை என்று சொன்னால், அப்படி சொல்வது தவறாகும்.

25. நான் ட பேக்டரியின் நிர்வாக இயக்குநராக இருக்கிறேன், வங்கியில் கடன் பெறுவதற்கு முத்திரை தாள்களில் எழுதி கொடுக்கிறேன், அதனால் இவ்வளவு பெரிய சொத்திற்கு Exhibit B2 தீர்மானம் ஏற்பட்டதாக சொல்வது முழுக்க முழுக்க பொய் என்று சொன்னால், அது வீட்டிற்குள் பேசப்பட்டு ஏற்பட்ட தீர்மானம் ஆகும், மேலும் அது அனைத்து சொத்துக்களையும் உள்ளடக்கவில்லை.

N. MURALIDHARAN

Digitally signed by N. MURALIDHARAN
Date: 2025.10.13 15:07:30 +0530